# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## இன்று தஞ்சையில் உரையாற்றுகிறார்!

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், நான்காம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 10-ஆம் தேதி தஞ்சாவூரில் தொடங்குகிறார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நான்காம் கட்டமாக தஞ்சாவூரில் பரப்புரையை தொடங்குகிறார்.



### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| **10.04.2026 (வெள்ளிக்கிழமை)** | | |
| மாலை 5 மணி | தஞ்சாவூர் (பொதுக்கூட்டம்) | திருவையாறு, தஞ்சாவூர், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை,பேராவூரணி, பாபநாசம், திருவிடைமருதூர், கும்பகோணம் |
| **11.04.2026 (சனிக்கிழமை)** | | |
| மாலை 4 மணி | புதுக்கோட்டை (பொதுக்கூட்டம்) | கந்தர்வக்கோட்டை, விராலிமலை, புதுக்கோட்டை, திருமயம், ஆலங்குடி, அறந்தாங்கி |
| மாலை 7 மணி | திருப்பத்தூர் (பொதுக்கூட்டம்) | காரைக்குடி, திருப்பத்தூர், சிவகங்கை, மானாமதுரை |
| **12.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)** | | |
| மாலை 4 மணி | பரமக்குடி (பொதுக்கூட்டம்) | பரமக்குடி, திருவாடானை, ராமநாதபுரம், முதுகுளத்தூர் |
| மாலை 7 மணி | தூத்துக்குடி (பொதுக்கூட்டம்) | விளாத்திகுளம், தூத்துக்குடி, திருச்செந்தூர், திருவைகுண்டம், ஒட்டப்பிடாரம், கோவில்பட்டி |

குறிப்பு:

❖ கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

❖ கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 08.04.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

## திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர்

# அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பனை ஆதரித்து வாக்கு சேகரிப்பு!

சிவகங்கை, ஏப். 10 - சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் வேட்பாளராக ஐந்தாம் முறையாக அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் போட்டியிடுகிறார்.

இவர் நேற்று திருப்பத்தூர் தாலுகா எஸ்.புதூர் பாரிவள்ளல் ஒன்றியத்தில் புழுதிப்பட்டி,கே புதுப் பட்டி, செட்டிகுறிச்சி, தர் மப்பட்டி வைரவன் பட்டி உட்பட 50க்கும் மேற்பட்ட கிராமங்களுக்குச் சென்று வாக்கு சேகரித்தார்.

வாக்கு சேகரிக்கச் சென்ற அமைச்சருக்கு பெண்கள் குலவையிட்டும்,ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்ப ளித்தார்கள்.

அமைச்சருடன் அவரது மருமகள் மருத்துவர் பாரு என்ற பிரியதர்ஷினி, பேரன்கள் கோகுல் என்ற பெரிய கருப்பன் , சிறுவன் அத்வைத் ஆகியோரும் வாக்கு சேகரித்தனர்.

உடன் ஒன்றிய செயலாளர் பி. செல்வராஜ் பொதுக் குழு உறுப்பினர் ஜெயராமன் , முன்னாள் ஒன்றிய செயலாளர் வி.பிஜெகநாதன் , தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் காளிமுத்து, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார் ஆண்டிச்சாமி சிதம்பரம், சுப்பிரமணியன் மற்றும் கூட்டணி கட்சியினர் சென்றார்கள்.

சுட்டெ ரிக்கும் வெயிலிலும் ஏராளமான பெண்கள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# செஞ்சி தொகுதி தி.மு.க. தேர்தல் அலுவலகம்!

## முன்னாள் மத்திய அமைச்சர் செஞ்சி இராமச்சந்திரன் திறந்து வைத்தார்!

செஞ்சி, ஏப். 10 – மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி செஞ்சி தொகுதி தி.மு.க. தேர்தல் அலுவலகத்தை முன்னாள் மத்திய அமைச்சர் செஞ்சி இராமச்சந்திரன் திறந்து வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தி.மு.க. சார்பில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மூன்றாவது முறையாக போட்டியிடுகிறார்.

செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொகுதி முழுவதும் உதயசூரியன் சின்னத்துக்கு தீவிர வாக்கு சேகரித்து வருகிறார்.

இந்நிலையில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி செஞ்சி தொகுதி தி.மு.க. தேர்தல் அலுவலகம் திறப்பு விழா நிகழ்ச்சி செஞ்சி திருவண்ணாமலை சாலையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளரும் செஞ்சி தொகுதி தி.மு.க. வேட்பாளருமான செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. முன்னிலையில் முன்னாள் மத்திய இணை அமைச்சர் செஞ்சிராமச்சந்திரன் செஞ்சி தொகுதி தி.மு.க. தேர்தல் அலுவலகத்தை திறந்து வைத்தார்.

இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்செல்வன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் ஒன் ன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன்,

மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,தே.மு.தி.க. மாவட்டப் பொருளாளர் தயாநிதி, வி.சி.க. மாவட்டச் செயலாளர் சிவா, தோழமைக் கட்சி நிர்வாகிகள் அர்ஷத், அபுபக்கர், டி.ஏ.கே.அன்சர், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் நகர செயலாளர் கார்த்திக், பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள், தோழமைக் கட்சி நிர்வாகிகள், தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



அருப்புக்கோட்டையில் அருப்புக்கோட்டை தி.மு.க. வேட்பாளர் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்களை ஆதரித்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் பிரச்சாரம் செய்தார். உடன் பொதுக்குழு உறுப்பினர் சிவப்பிராகசம், முன்னாள் எம்.எல்.ஏ. விஜயகுமார், நகரச் செயலாளர் ஏ.கே.மணி ஆகியோர் இருந்தனர்.



தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.வை ஆதரித்து வாசுதேவநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட புளியங்குடி மேலப்பள்ளி வாசல் அருகில் முஸ்லிம் லீக் மாநில பொதுச்செயலாளர் முகமதுஅபுபக்கர் கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் வாசுதேவநல்லூர் தொகுதி கழக வேட்பாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.தொகுதி பார்வையாளர் டாக்டர்.செண்பக விநாயகம், முஸ்லிம் லீக் மாவட்ட தலைவர் அப்துல் ரகுமான் உட்பட பலர் உள்ளனர்.